**செய்தி வெளியீடு எண்: 706** **நாள்:25.09.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன், மாநில வளர்ச்சிக் கொள்கை குழு அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் பணிமுன்னேற்றம் குறித்து காணொளி காட்சி மூலம் மேற்கொண்ட ஆய்வு</u>

மாவட்டங்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வினை குறைக்கவும், மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி என்ற திட்டம் 2012–13 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. சமூக–பொருளாதார வளர்ச்சியை அளவிடக்கூடிய காரணிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வினை கண்டறிந்து, அவற்றை சீர்செய்யவும், மனித மேம்பாட்டை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டம் மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக 734 திட்டங்கள், ரூ.576.55 கோடி மதிப்பீட்டில் 105 பின்தங்கிய வட்டாரங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு துணைத் தலைவர், திரு.சி.பொன்னையன், மாநில வளர்ச்சிக் கொள்கை குழு அவர்கள் இத்திட்டத்தின் மூலம் அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களின் பணிமுன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இன்று 24.09.2020 காணொளி காட்சி மூலமாக ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் குறிப்பாக தருமபுரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், கல்லக்குறிச்சி ஆகிய மாவட்ட ஆட்சியர்களுக்கு நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறும் அப்போது தான் இத்திட்டங்களின் நோக்கமும், பயனும் மக்களைச் சென்றடையும் என்றும் வலியுறுத்தினார். முன்னதாக மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர், திரு.அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., இத்திட்டத்தின் நோக்கத்தினையும், சிறப்பியல்புகளையும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கு விளக்கிக் கூறினார். இந்த ஆய்வினை மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவின் உறுப்பினர் செயலர், திரு.அனில் மேஷ்ராம், இஆ.ப, மற்றும் ஊரக வளர்ச்சி (ம) மாவட்ட திட்டமிடல் குழுவின் குழுமத் தலைவர், கூடுதல் இயக்குநர்/ திருமதி. ஆர்.வி.ஷஜீவனா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**